## பேச்சு - பிரிவு 6

# சுவாமி விபுலாநந்தரின் பன்முக ஆளுமைகள்

சுவாமி விபுலாநந்தர், ஈழம் முதல் இமயம் வரை தமிழ்ப் பணியாற்றி புகழ்பெற்றவர். இன்று இந்த வையகமே போற்றும் வள்ளலாக உயர்ந்ததற்கு அவரிடம் ஆழமாக வேரோடியிருந்த பன்முக ஆளுமையே காரணம் என்பேன். அவர் தடம் பதித்த சகல துறையிலும் ஒரு கலங்கரை விளக்காகப் பிரகாசித்தார்.

குழந்தைப்பராயத்தில் கதிர்காமக் கந்தன் காட்டிய கருணையோ, இளைஞனான போது இந்தியப் புண்ணியபூமி கொடுத்த தவப்பயனோ, அவர் காலடித்தடம் வைத்த எத்துறையும் அவரின் ஆளுமை கண்டு அவரைச் சான்றோனாகவே ஏற்றுக்கொண்டது. எந்நிலமும் அவர் ஆளுமைக்கு அடிமையானது. அவர் சேர்ந்த எந்த ஸ்தாபனமும் அவர் துதி பாடின. அவர் பொன்வாய் மொழிகள் தமிழ்மக்கள் மனதில் மந்திரமாய் நிறைத்தன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக கடமையாற்றிய ஆளுமையிலும் அந்தப் பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக, அது நெடும் கோபுரமாக எழ வழிசமைத்த வள்ளலின் ஆளுமையை என்னே என்பேன்.

தமிழுடன் கூடவே ஆங்கிலமும், லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் பாண்டித்தியம் கொண்டிருந்தார். இந்த மொழித்திறமையே அவரது மொழி, இசை, நாடகம் முதலாய ஆய்வுகளுக்கு தங்கு தடைகளின்றி வலுச்சேர்த்தது. ஷேக்ஸ்பியரின் ஆங்கில ஆக்கங்களான 45 நாடகங்களில் 12 ஐத் தமிழில் மொழிபெயர்த்தார். வங்கக்கவிஞன் ரவிந்திரநாத் தாகூரின் The Gardener என்ற ஆக்கத்தை தமிழில் மொழி பெயர்த்தார்.

மறைந்துபோன பழந்தமிழ் இசையையும், இசைக் கருவிகளையும் பதினான்கு ஆண்டுகள் பாடுபட்டு ஆய்வுசெய்து பெற்ற தகவல்களையும் தன் மகத்தான படைப்பான யாழ்நூல் மூலமாக மீண்டும் புவனமதில் தவழவிட்டார். அவரது கவிதை வளத்திற்குச் நற்சான்றாக கங்கையில் விடுத்த ஓலையும் ஈசன் உவக்கும் இன்மலர் மூன்றும் குருதேவர் வாக்கியமும் சாட்சி சொல்கின்றன.

பண்டிதராலும் அந்தணராலும் நிந்திக்கப்பட்டு, முகவரி தொலைத்திருந்த தமிழ் அன்னை பெற்றெடுத்த புரட்சிக்கவிஞன் பாரதியை "ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்தபின் வாராது வந்த மாமணியை தொலைப்போமா" என்று முழங்கியது என்னே ஆளுமை. கலைச்சொல்லாக்க முயற்சியில் அடிகளார் ஒரு முடிசூடா மன்னனாக, கணிதம் முதல் விவசாயம் வரையான ஒன்பது துறைகளில் மொத்தம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சொற்களைச் செதுக்கியது அவர்தம் ஆளுமையின் பெருமைதனை என்றும் பறைசாற்றும்.

பத்திரிகைகளான வேதாந்தகேசரி, இராமகிருஷ்ண விஜயம், விவேகானந்தன், பிரபுத்த பாரதம் என்பவற்றில் அவரது ஆழ்ந்த பங்களிப்பானது அடிகளின் பத்திரிகை ஆசிரிய ஆளுமையை வெட்டவெளிச்சமாகக் காட்டுகின்றது.

ஈழநாட்டின் தமிழ்ப்பகுதிகளில் பாடசாலைகள் அமைத்து ஏழைச்சிறாரும் கல்விபெற வாய்ப்பளித்த ஆளுமைக்கு நன்றி கூறும் சான்றாகவே கனடாவில் இந்த சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் அமைந்தது என்றால் வள்ளலின் ஆளுமை பற்றிப்பேசவும் வேண்டுமோ. அவர் ஆளுமையில் உருவான படைப்பின் பேரழகைக்காண ஆயிரம் கண் வேண்டும் அன்றோ என்றுகூறி என் சொற்பொழிவை நிறைவுசெய்கின்றேன்.

நன்றி, வணக்கம்.